# சிறுசேமிப்பு

முன்னுரை

வாழ்க்கை வாழ்வதற்கே; இன்பமாய் வாழ்வதற்கே. வறுமையின் கோரப்பிடியில் சிக்கி வாடி வதங்க யாரும் விரும்பமாட்டார்கள். ‘இன்பமே எந்நாளும் துன்பமில்லை’ என்று சொல்லும்படியாய் வாழ வேண்டும் என்பதே எல்லோருடைய நோக்கமாகும். அந்த நோக்கம் நிறைவேற வேண்டுமானால், ஈட்டிய பொருளைச் சிக்கனமாய்ச் செலவிட்டு சேமித்து வாழ வேண்டும். உணவு, உடை, உறைவிடம் ஆகிய மூன்றும் மனிதனின் அன்றாட அவசியத் தேவைகளாகும். இவற்றைத் தடையின்றிப் பெறப் பணம் தேவை. பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை. எனவே, பொருளைத் தேடவேண்டும். தேடினால் மட்டும் போதாது, அதில் சிறிது சேமிக்கவும் கற்றுக்கொள்ளவேண்டும். அதுதான் ஒருவனது வாழ்க்கை இன்பமாக அமைய வழிவகுக்கும்.

சேமிப்பின் தேவை :

மனிதனின் வாழ்க்கைப் பயணத்தில் மூன்று வகையான தேவைகள் ஏற்படுகின்றன. (1) அன்றாடத் தேவை. (2) அவசரத் தேவை. (3) எதிர்காலத் தேவை. இவற்றில் பின்னிரு தேவைகளை நிறைவு செய்யச் சேமிப்பே வகை செய்கின்றது. எறும்பு மழைக்காலத்திற்குரிய உணவை வெயிற்காலத்திலேயே தேடிச் சேமிக்கிறது. நாமும் பாடுபட்டுப் பொருள் தேடுகின்ற காலத்திலே சேமிப்பது மிகவும் தேவையாகிறது.

செல்வமும் சிக்கனமும்:

“அகடுற யார்மாட்டும் நில்லாது செல்வம் சகடக்கால் போல வரும்”

என நாலடியார் உரைக்கின்றது. ஈட்டிய செல்வத்தை இன்றியமையாத தேவைகளுக்குச் செலவிட்டு வாழ்வது சிக்கன வாழ்வாகும். சிக்கனம் வேறு; கஞ்சத்தனம் வேறு. இன்றியமையாத் தேவைகளுக்குக் கூடச் செலவு செய்யாமலிருப்பது கஞ்சத்தனம். அது வெறுக்கத்தக்க குணம். தேவையானவற்றிற்குச் செலவு செய்து, மீதியைச் சேமித்து வாழ்வது சிக்கனம் இது விரும்பத்தக்க குணம்.

**an International CBSE Finger Print School**
**Coimbatore**

பலவகை சேமிப்புத் திட்டங்கள் :

சேமிக்கும் பழக்கம் வந்துவிட்டால் பணத்தைப் பாதுகாத்து வைக்கும் வழிவகைகள் ஏராளமாக உள்ளன. சேமிப்பதற்காக அரசு பல திட்டங்களை உருவாக்கியுள்ளது. அஞ்சலகத்தில் உள்ள சேமிப்புத் திட்டத்தில் சேர்ந்து பயன் பெறலாம். வங்கிகளில் சேமிக்கலாம். தேசியப் பாதுகாப்புப் பத்திரங்கள் மூலம் சேமிக்கலாம். மாணவர்கள் சேமிப்பதற்குப் பள்ளியில் சஞ்சாயிகா செயல்படுகிறது.

சேமிப்பின் பயன்கள்

"பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை", "இல்லாரை எல்லாரும் எள்ளுவர்", "இல்லானை இல்லாளும் வேண்டாள்" என்றெல்லாம் செல்வத்தின் சிறப்பைப் புலவர்கள் காட்டுகின்றனர். அதனால், செல்வத்தைத் தேடுவதில் எத்தனை அக்கறை காட்டுகின்றோமோ அவ்வளவு அக்கறை சேமிக்கவும் காட்ட வேண்டும். சேமிக்கின்ற பணம் குழந்தைகளின் கல்வி, திருமணம் போன்றன சிறப்பாய் அமைந்திடக் கைகொடுக்கின்றது. ஒவ்வொரு மனிதனின் இறுதிக் காலத்திற்கும் சேமிப்புப் பாதுகாப்பாகவும் அமைகின்றது.

முடிவுரை

"பணம் செலவழிப்பதை எல்லாம் எழுதி வை. செலவழித்தது அவசியம் தானா? என்று சிந்தித்துப்பார், சிக்கனம் தானாக வந்துவிடும்" என்பது காந்தியடிகள் காட்டிய வழி. இதை உணர்ந்து சிக்கன வாழ்வு வாழ்ந்து சிறப்பு அடைவோமாக.

"ஆகாறு அளவு இட்டிதாயினும் கேடில்லை
போகாறு அகலாக் கடை"

திருக்குறள்